# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2013 - 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்:............................................................. நேரம்: 120 மணித்துளிகள்

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. தமிழில் உள்ள உயிரெழுத்துகள் ______________ .

   (12, 30, 18)

2. தோண்டத் தோண்ட ஊறுவது ______________ .

   (கேணி, ஆறு, கடல்)

3. பின்வருவனவற்றுள் சிற்றுண்டி ______________ .

   (சோறு, பிட்டு, வடை)

4. உடுக்கை என்றால் ______________ .

   (உடுக்கு, உடை, விண்மீன்)

5. அப்பா சினத்தால் பற்களை ______________ எனக் கடித்தார்.

   (பறபற, புறுபுறு, நறநற)

6. ஆடிப்பிறப்பன்று கூடி இருந்து குடிப்பது ______________.

   (பனங்கூழ், ஆடிக்கூழ், ஒடியற்கூழ்)

7. சுற்றம் என்ற சொல் குறிப்பது ______________ .

   (நட்பு, பகை, உறவு)

8. பரதநாட்டிய நிகழ்வில் சிறப்பிடம் பெறும் முழவு

   ______________ .

   (தண்ணுமை, மேளம், முரசு)

9. ____________________ பெற்றோரைப் பேண மறவாதே!

(உனது, எனது, தனது)

10. மழை விடாது ____________________ .

(வீசுகிறது, பெய்கிறது, எறிக்கிறது)

11. சிங்கம் ____________________ .

(கத்தும், கதறும், முழங்கும்)

12. கரையில்லாதது என நாலடியார் கூறுவது ________________.

(கல்வி, செல்வம், வீரம்)

13. **நொடி:-** 'இரவெல்லாம் பூங்காடு பகலெல்லாம் வெறுங்காடு'

அது என்ன? ____________________ .

(பூமி, வானம், காடு)

14. முத்தமிழில் ஒன்று ____________________ .

(கதை, நடனம், நாடகம்)

15. மாறனின் கையெழுத்து ____________________ இருந்தது.

(மணிமணியாக, பளபள, அணிஅணியாக)

16. புல்லிதழ் இருப்பது ____________________ .

(நெல்லில், நீரில், பூவில்)

17. கூலங்கள் விளைந்து வீடு வந்து சேரும் மாதம்

____________________ .

(ஆனி, ஆவணி, புரட்டாதி)

18. அங்கே பல பொம்மைகள் உள்ளன. ______________________

உனக்குப் பிடித்ததை எடுத்துக்கொள்.

(எவற்றுள், அவற்றுள், இவற்றுள்)

19. **குறள் :** - உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

______________________ களைவதாம் நட்பு

(இடுக்கண், கடுக்கண், உடுக்கண்)

20. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள்

______________________ .

(216, 247, 30)

21. பள்ளிக்கு நேரமாகி விட்டதால் நண்பர்கள் இருவரும்

______________________ச் சென்றனர்.

(பாடிப்பாடி, ஆடிஆடி, ஓடிஓடி) )

22. தமிழர்களின் மிகப் பழைமையான இசைக்கருவி

______________________ .

(யாழ், வயலின், வீணை)

23. சிங்கத்தைத் திட்டம் போட்டுக் கொன்ற விலங்கு

______________________ .

(முயல், புலி, யானை)

24. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று ______________________ .

(புறநானூறு, தொல்காப்பியம், சிலப்பதிகாரம்)

25. தூயவனால் ஓவியம் ______________________ .

(எழுதப்பட்டது, வரையப்பட்டது, நடிக்கப்பட்டது)

26. உழவர் ______________________ இன்றி உழைக்கின்றனர்.

(இன்பதுன்பம், ஊண்உறக்கம், உள்ளும்புறமும்)

27. முன்னாளில் திருமண விழாக்களில் கொட்டிய முரசு

______________________ .

(படைமுரசு, போர்முரசு, மணமுரசு)

28. **பழமொழி: -** முயற்சி உடையார் ______________________

அடையார்.

(இகழ்ச்சி, புகழ்ச்சி, மகிழ்ச்சி)

29. நல்ல பண்புள்ள மாந்தனை உருவாக்குவது

______________________ .

(குமுகாயம், குடும்பம், நாடு)

30. நான் வருகிற மாதம் ஊருக்குச் ______________________ .

(செல்கிறோம், சென்றேன், செல்வேன்)

புள்ளிகள் 30

**2) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| படிப்படியாக | கல்விகேள்விகளில் | கலகல | இன்பதுன்பம் | பளபள |

1. தேன்மொழி ________________ என்று சிரித்தாள்.

2. தங்கையின் சட்டையில் இருந்த மணிகள் ________________ என மின்னியது.

3. எமது வாழ்வில் ________________ மாறி மாறி வரும்.

4. இனியன் ________________ சிறந்து விளங்கினான்.

5. புவியின் வெப்பம் ________________ அதிகரித்துச் செல்கிறது.

புள்ளிகள் 05

**3) பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. பாட்டி அன்பாகக் குழந்தையைக் கட்டி

_______________________________ .

2. மாமியும் மாமாவும் நேற்று எங்கள் வீட்டுக்கு

_______________________________ .

3. நாளை நடக்கும் விழாவில் என் நண்பி நடனம்

_______________________________ .

4. காகம் ஒன்று மரத்தில் கூடு கட்டி வாழ்ந்து

_______________________________ .

5. கார்முகிலைக் கண்டால் மயில் ஆலத்

_______________________________ .

புள்ளிகள் 10

**4) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

வடநாட்டு மன்னர்களான கனகனும் விசயனும் தமிழர் வீரத்தை இகழ்ந்து பேசினர். இதனைச் செவியுற்ற சேரன்செங்குட்டுவன் பெருஞ்சினம் கொண்டான். கண்ணகிக்குச் சிலை அமைக்க இமயத்தில் எடுக்கும் கல்லைக் கனகவிசயன் தலையில் ஏற்றிக் கொண்டு வருவேன் என்று சூள் உரைத்தான். அதன்படியே சேரன்செங்குட்டுவன் படையெடுத்துச் சென்று கனகவிசயனைப் போரில் வென்றான். அவர்களின் தலையில் கல்லைச் சுமந்து வரச் செய்தான். அக்கல்லைக் கொண்டு கண்ணகிக்குச் சிலை வடித்தான். இக்கதை சிலப்பதிகாரம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

1. கனகவிசயன் எந்நாட்டு மன்னர்கள்?

______________________________

2. சேரன்செங்குட்டுவன் ஏன் பெருஞ்சினம் கொண்டான்?

______________________________

3. கனகனையும் விசயனையும் போரில் வென்ற மன்னன் யார்?

______________________________

4. யாருக்குச் சிலை அமைக்க இமயத்தில் கல் எடுக்கப்பட்டது?

______________________________

5. இக்கதை எந்த நூலில் கூறப்பட்டுள்ளது?

______________________________

புள்ளிகள் 10

**5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| முக்கனிகளும் | சர்க்கரையும் | முதலாம் | பொங்கல் | முற்றத்தில் |

தைப்பொங்கல் தமிழரின் திருநாள். தைப்பொங்கல் தை ________________ நாள் கொண்டாடப்படும். இதை உழவர் திருநாள் என்றும் கூறுவர். பொங்கலன்று ________________ கோலம் போடுவர். கரும்பு கட்டுவர். புதுப்பானையில் ________________ பொங்குவர். இனிப்புக்காகத் தேனும் ________________ சேர்ப்பர். பொங்கல் பொங்கி வரும்போது “பொங்கலோ பொங்கல்” என்று கூறுவர். பொங்கலோடு ________________ சேர்த்துக் கதிரவனுக்குப் படைப்பர்.

புள்ளிகள் 10

**6) கீழே தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் எழுதுக.**

1. நண்பன் ____________________
2. முயல் ____________________
3. கதிரவன் ____________________
4. பள்ளி ____________________
5. வீடு ____________________

புள்ளிகள் 05

**7) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள சொல்லியமாக்குக.**

1. மொழி / ஒரு / தமிழ் / தொன்மையான

______________________________________________ .

2. ஆடினர் / எழிலியும் / நடனம் / வன்னியாவும்

______________________________________________ .

3. அழைப்பர் / என்றும் / தோற்கருவிகளை / முழவுகள்

______________________________________________ .

4. கூறுவார் / கதைகளைக் / வீரதீரக் / பாட்டி

______________________________________________ .

5. ஒன்று / தமிழர்களின் / கொண்டாட்டங்களில் / ஆடிப்பிறப்பும்

______________________________________________ .

புள்ளிகள் 05

**8) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.**

1. முத்தமிழ் எவை?

2. எமது மங்கல நிகழ்வுகளில் முதன்மையான இடத்தைப் பெறும் முழவு எது?

3. ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருப்பது எது?

4. சிங்கம் ஏன் கிணற்றினுள் குதித்தது?

5. தமிழின் முதன்மையான இலக்கண நூல் எது?

புள்ளிகள் 10

9. தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.



புள்ளிகள் 15